# இலங்கை ஜனாதிபதித் தேர்தல்களும் வாக்களிக்கப்பட்ட முறையும்
## 1988 டிசம்பர் 19

1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே மோதல் வெடித்த நிலையில் இத்தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலில் வெற்றீயிட்டினால் இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்புவதென்ற வாக்குறுதியை அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஆர் பி-ரேமதாஸ வழங்கி இருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சிறிமா பண்டாரநாயக்கா போட்டியிட்டார். இந்திய இராணுவத்துடன் மோதல் வெடித்த நிலையில் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரமாக இருந்தனர். இந்தப் பின்னணியிலேயே இத்தேர்தல் இடம்பெற்றது. ஆர் பிரமேதாஸவின் வெற்றிக்குப் பின் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டனர். இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது.

| மாவட்டம் | ஐதேக | சுக | மக | அ. வாக்குகள் | மொ. வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 33,650<br>28.03% | 44,197<br>36.82% | 42,198<br>35.15% | 128,562<br>21.72% | 591,782 |
| வன்னி | 10,580<br>55.78% | 4,889<br>25.77% | 3,500<br>18.45% | 19,677<br>13.79% | 142,723 |
| மட்டக்களப்பு | 61,657<br>50.99% | 21,018<br>17.38% | 38,243<br>31.63% | 126,081<br>58.48% | 215,585 |
| திகாமடுல்ல | 96,420<br>50.77% | 83,137<br>43.78% | 10,352<br>5.45% | 193,711<br>72.89% | 265,768 |
| திருகோணமலை | 36,841<br>45.70% | 29,679<br>36.81% | 14,103<br>17.49% | 81,949<br>53.81% | 152,289 |
| இலங்கை முழுவதும் | 2,569,199<br>50.43% | 2,289,860<br>44.95% | 235,719<br>4.63% | 5,186,223<br>55.32% | 9,375,742 |